சிறுவர்

# அமுதம்

19/01/1996

கிண்ணம்: 7

எண்ணம்: 1



சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை.

KINDER LITERARISCHES MAGAZIN

பய மெனும் பேய் தனை யடித்தோம்—பொய்மைப்
பாம்பைப் பிளந் துயிரைக் குடித்தோம்
வியனுல கனைத்தை யமுழு தென நுகரும்
வேத வாழ்வினைக் கைப் பிடித்தோம்



அன்புச் சிறுவர் சிறுமியரே!!

"காலம் பொன்னானது
கடமை கண்ணானது"

என்பது ஆன்றோர் வாக்கு. உங்கள் சஞ்சிகையான சிறுவர் அமுதமும் அந்த வாக்கியத்தைத் தன் எண்ணத்தில் வைத்துச் செயல்ப் படுகின்றது என்பதில் எவ்விதமான சந்தேகமும் இல்லை. எத்தனையோ இடர்களுக்கு மத்தியிலும் சிறியவர்களான உங்களின் எதிர்காலத்தை வளமாக்குவதை தன் எண்ணத்தில் கொண்டுள்ளது. எதிர்காலத்தில் பண்பட்டவராக, நல்லவர்களாக வாழ்ந்து ஒவ்வொருவரும் மற்றவர்களுக்கு வழிகாட்டியாக வாழ வேண்டும் என்று ஆசைப்படுகின்றது.

தாய் நாட்டை விட்டு அந்நிய மண்ணில் வாழ்ந்து வரும் தமிழர்களாகிய நாங்கள் நாட்டின் நலனை விரும்பி எங்களாலான உதவிகளைச் செய்ய வேண்டும். நிதி கொடுப்பது, உடுப்புக்கள், மருந்துகள் அனுப்புவது போன்று இப்படிப் பலவிதமாகத் தமிழர்களாகிய நாங்கள் உதவுகின்றோம். எப்படி உதவி செய்த போதும் உயிர் இழப்புக்களும், உடமைகள் இழப்புக்களுக்கும் உள்ளாகி விரக்தியுற்று வாழும் நம் உறவுகளின் எதிர்காலம் படிப்பறிவற்று பண்பற்று வாழும் நிலை ஏற்படும் என்பது வெளிப்படை.

நாங்கள் நாடு திரும்பும் வேளையில் அவர்களை வழி நடத்த வேண்டும். அவர்கள் வாழ வழி செய்ய வேண்டும். இதற்காக இங்குள்ள இளம் சந்ததியினராகிய நீங்கள் தாய் மொழி அறிவைக் கொண்டிருப்பது மட்டும் போதாது. பண்புள்ளவர்களாக, வழிகாட்டிகளாக வாழ்வதைக் கடமையாகக் கொள்ள வேண்டும். நாடு திரும்பலாம், திரும்ப முடியாமல் போகலாம். பண்புள்ளவர்களாக வாழ்வது நன்மையே தரும். நமக்குப் பெருமையையும் தரும் அல்லவா?

-ஆசிரியை-

# நாக்கு

நாக்கு, உணவைச் சுவைக்க மட்டுமே பயன் படவில்லை. வேறு பல வகைகளிலும் அது பயன்படுகிறது. பொதுவாக, மாமிசம் உண்ணும் உயிரினங்களின் நாக்கு சொரசொரப்பாக இருக்கும். தாவரம் உண்ணும் உயிரினங்களின் நாக்கு சொரசொரப்பாக இருக்காது. மனிதனின் நாக்கு சொரசொரப்பாக இருப்பதில்லை.

**வௌவால்:**

வௌவாலின் நாக்கில் மேல் உட்பக்கமாக வளைந்த முட்கள் இருக்கின்றன அதன் நாக்கில் பட்ட எந்தப் பூச்சியும் (உணவு) தப்பி விடுவதில்லை.





**லெமூர்:**

இரட்டை நாக்குக் கொண்ட பிராணி இது. இதற்கு மேலும் கீழுமாக இரண்டு நாக்குகள் இருக்கின்றன.





**ஒகாபி:**

இதற்கு நீண்ட நாக்கு இருக்கிறது. தாவரங்களில் தழைகளை வளைத்து உண்ணவும், முகத்தைச் சுத்தம் செய்து கொள்ளவும் இதன் நாக்கு உதவுகின்றது.



**'எறும்புதின்னி':**

இதன் நாக்கு மார்பெலும்பிலிருந்து ஆரம்பிக்கின்றது. கம்பி போல உருண்டை வடிவான தன் நாக்கை, எறும்பு வாழும் புற்றுக்குள் செலுத்தி வெளியே இழுக்கும் போது எறும்புகளும் கூடவே, நாக்கில் ஒட்டிக் கொண்டு வந்து விடும்.



**பூனை:**

பூனைக்கு இனிப்புச் சுவையை உணரும் சக்தி இல்லை. பூனையின் நாக்கு அதன் உடம்பைச் சுத்தம் செய்து கொள்ளவும் உதவுகிறது.





பாம்பு:

பாம்பின் நாக்கு நுனியில் பிளவு கொண்டது. தொடும் உணர்ச்சியும், வாசனையையும் தன் நாக்கினால் அறிந்து கொள்கிறது.




மான்:

உயிரினங்களிலேயே மான் தான் கூடுதலான சுவைகளை அறிந்து கொள்கிறது. இது 50,000 விதமான சுவைகளைப் பிரித்து அறிந்து கொள்ளுமாம். உணவின் சுவை அறிந்து உண்பதற்கு மானினத்திற்கு நிகராக வேறு இனம் எதுவும் இல்லை.



கன்னெட்:

இந்தப் பறவைக்கு நாக்கு இருக்கிறதா, இல்லையா என்று சொல்லமுடியாத அளவிற்கு சிறிய நாக்கு இருக்கிறது.



ஒட்டைச் சிவிங்கி:

ஒட்டைச்சிவிங்கி தன் நாக்கால் தன் காதுகளைத் தொடுமளவிற்கு நீட்டிக் கொள்ளும்.





**மரக்கொத்தி:**

மரக்கொத்தியின் நாக்கு அதன் மேல் அலகில் இருந்து ஆரம்பித்து, மண்டையோட்டைச் சுற்றி வந்து, தொண்டையிலிருந்து நீளுகின்றது. நாக்கில் உள் நோக்கி வளைந்த முட்கள் உண்டு. மரப்பட்டைகளைத் தன் அலகினால் துளைத்து, பூச்சிகளைப் பிடித்துக் கொள்ள நாக்கு உதவுகிறது.



**தேன்சிட்டு:**

ஹம்மிங்பேட் என்றழைக்கப்படும் தேன்சிட்டுக்கு நீளமான நாக்கு. நாக்கின் அமைப்புக் குழல் போன்றது. தன் உணவான தேனை இது பூவிலிருந்து நாக்கினால் உறிஞ்சி எடுத்துச் கொள்ளும்.




**நாய்:**

நாய் தனது நாக்கை வெளியே நீட்டிக் கொண்டிருப்பது உங்களுக்குத் தெரியும். ஏன் அப்படிச் செய்கிறது என்பது தெரியுமா?. நாயின் உடம்பில்,

வியர்வைச் சுரப்பிகள் இல்லை. உடம்பில் வெப்பமாக இருக்கும் போது நாக்கின் மூலமாக வியர்வை வெளியேறுகிறது.

**பிளமிங்கோ:**

இந்தப் பறவையின் நாக்கும் விசித்திரமானது தான். அலகில் சிறிது கூட இடை வெளியில்லாமல், தடித்த பருமனான நாக்கு. நாக்கில் முட்களும் உண்டு. சேறு தண்ணீருடன் பூச்சி, புழுக்களை அலகில் அடக்கிக் கொண்டு, நாக்கை அலகுக்குள் அடக்கும்போது சேறும் வண்ணீரும் வெளியேறுகின்றன. உணவு உள்ளேயே தங்கி விடுகின்றன.



**மனிதன்:**

மனித நாக்கில் நாலு விதமான 9000 சுவை உணர்வுகள் இருக்கின்றன. அவற்றின் மூலம் ஆறுசுவைகளை அறிந்து கொள்கிறான்.

–நன்றி: கோகுலம்.

# நம்பிக்கை நட்சத்திரம்




என்னிடம் ஒரு வர்ணப் பெட்டி இருந்தது
ஜொலித்துக் கொண்டு தூக்கலாக
அந்தக் காயங்களின் இரத்தத்தை வரைய
என்னிடம் சிவப்பு இருக்கவில்லை
அந்த ஆதரவற்றவர்களின் துன்பத்தைத் தீட்ட
என்னிடம் கறுப்பு இருக்கவில்லை
அந்த செத்த முகங்களுக்கு உருக் கொடுக்க
என்னிடம் வெள்ளை இருக்கவில்லை
அந்த தகித்துக் கொண்டிருந்த மணல்களை விவரிக்க
என்னிடம் மஞ்சள் இருக்கவில்லை

.........ஆனால்

என்னிடம் ஆரஞ்சு இருந்தது
வாழ்க்கையின் ஆனந்தத்தைப் பிழிந்து காட்ட
என்னிடம் நீலம் இருந்தது
தெளிந்த வானத்தைப் பிரதிபலித்து காட்ட
என்னிடம் பச்சை இருந்தது
இளம்தளிர்களைப் படம் பிடித்துக்காட்ட
என்னிடம் ரோஸ் இருந்தது
நம்பிக்கைக் கனவுகளைச் சித்திரமாகத் தீட்ட
நான் உட்காந்து வரையத் தொடங்கினேன்
சமாதானம்

— நன்றி துளிர் .

# பளிங்கு யானைகள்



கடலாடம் என்னும் நாட்டை மகிபன் எனனும் தலைவன் நிர்வாகம் செய்து வந்தான். அந்த நாட்டில் சர்வாதிகார ஆட்சியாக இருந்தபோதும் மக்கள் நிம்மதியாக வாழ்ந்து வந்தனர். அதற்குக் காரணம் திறமையான நிர்வாகம் தான். மகிபனும், அவனுடைய நிர்வாகக்குழுவினரும் நாட்டை நல்ல மூறையில் நிர்வாகம் செய்து வந்தார்கள். நிர்வாகத்தின் கீழே மிருகக் காட்சிச்சாலைகள், நூதனசாலைகள், வாசிகசாலைகள், கல்விக்கூடங்கள், விளையாட்டு மைதானங்கள் போன்றவைகள் இயங்கி வந்தன.

இவ்வாறு இயங்கி வந்த போதிலும் அரச நூதனசாலை ஒன்று நிர்வாகசபைக் கட்டிடத்துள் இயங்கி வந்தது. அதனை அரசத் தனாதிகாரியான ஆனந்தபிள்ளை நிர்வகித்து வந்தார். ஆனந்தபிள்ளை நல்ல உள்ளம் கொண்டவர். மக்களிடையே செல்வாக்குப் பெற்றவர். ஆதலால் மக்கள் அந்த நூதனசாலையைப் பார்வையிடுவதற்காக, மாதத்தில் இரண்டு நாட்களை ஒதுக்கிக் கொடுத்தார். மற்ற நாட்கள் எல்லாம் அரச விருந்தினர், வெளிநாட்டு யாத்திரிகள் ஆகியவர்களுக்கே நூதனசாலை திறந்து விடப்படும்.

நூதனசாலையில் பளிங்குக் கற்களால் செய்யப் பட்ட யானைகள் பிரபலம் பெற்றிருந்தன. அவைகள் மிகவும் கலை நுட்பத்துடன் கடலாட நாட்டின் சிற்பிகளினால் செதுக்கப் பட்டிருந்தன. கடலாட நாட்டிற்குப் பெருமையைத் தேடிக் கொடுப்பதில் முன்னணியில் நின்றன அப் பளிங்கு யானைகள். தான் பொறுப்பேற்றிருந்த நூதனசாலையினை மிகவும் கவனத்துடனும், விருப்பத்துடனும் ஆனந்தபிள்ளை கவனித்து வந்தார்.

நூதனசாலையில் உள்ள பொருட்கள் சேதப்படுத்தப் பட்டாலோ, களவு போய் விட்டாலோ, அதற்கான தண்டனையை ஆனந்தபிள்ளையே பொறுப்பேற்க வேண்டும். தண்டனை எதுவாக இருந்தாலும்

ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்தக் கட்டளையை ஏற்றுக் கொண்டு தான் ஆனந்தபிள்ளையும் தன் கடமையைச் சரிவரச் செய்து வந்தார். ஒருசமயம் தன் துவேலையாட்களோடு நூதனசாலையைத் துப்பரவு செய்வதில் ஈடுபட்டிருந்தார்.

பளிங்கு யானைகளைத் துப்பரவு செய்யும்போது இடதுபக்கத்தில் இருந்த பளிங்குயானை சரிந்து கீழே விழுந்து சுக்கல் சுக்கலாக நொறுங்கி விட்டது. ஆனந்தபிள்ளை உட்பட வேலையாட்கள் அனைவருமே செயலற்று நின்று விட்டனர். ஆனந்தபிள்ளை நிதானத்தை அடைந்தார். வேலையாட்களுக்கு ஆறுதல் கூறினார். நூதனசாலையைத் துப்பரவு செய்த பின் எல்லோரையும் அவர்கள் வீட்டுக்கு அனுப்பினார்.

பின் நிர்வாகசபை கூடுமிடத்திற்குச் சென்று நடந்ததைக் கூறினார். மகிபனோ மிகவும் ஆத்திரப்பட்டான். நிர்வாகசபையினரோ செய்வதறியாது திகைத்தனர். ஆத்திரமுற்றிருந்த மகிபன் ஆனந்தபிள்ளைக்கும், அவரோடு வேலை செய்தவர்களுக்கும் மரணதண்டனை விதித்தான். ஆனந்தபிள்ளை தமக்கு மட்டும் தண்டனை தரும்படியும், தன் கவனக்குறைவாலேயே பளிங்குயானை உடைந்ததாகவும் கூறினார். இதனால் மற்றவர்களுக்கான தண்டனை நீக்கப் பட்டது.

ஆனந்தபிள்ளைக்கான மரணதண்டனை மட்டும் நீக்கப்படவில்லை.

தங்கள் விருப்பத்துக்குரிய ஆனந்தபிள்ளைக்கு மரணதண்டனை விதித்திருப்பதை வேலையாட்கள் மூலமாகவும், பத்திரிகை மூலமாகவும் அறிந்த கடவாட நகரத்து மக்கள் கலவரம் அடைந்தார்கள். ஆத்திரத்தாலும், கவலையாலும் உந்தப் பட்டு நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தத் திட்டம் தீட்டினர். இதை அறிந்த ஆனந்தபிள்ளை அவர்களைத் தடுத்தார். நகரமக்கள் அங்கு வாழ்ந்து வந்த ஞானியான பரமரிடம் ஆலோசனை கேட்டார்கள். பரமர் தான் மரணதண்டனையை நீக்குவதற்கு வழி செய்வதாகக் கூறி அனுப்பி விட்டு நிர்வாகக்கூட்டம் நடைபெறும் இடத்திற்கு வந்தார்.

மகிபனிடம் ஆனந்தபிள்ளைக்கான தண்டனையை ந்க்கும்படி கேட்டார். மகிபனோ அவரிடம் "இந்த நாட்டின் மதிப்புக்குரியவர் நீங்கள். அதற்காக நீங்கள் சொல்வதை எல்லாம் நாங்கள் கேட்க வேண்டுமென்பதில்லை. விதித்த தண்டனை தண்டனைதான். அதில் மாற்றம் ஏதுமில்லை." என்று மறுத்துப் பேசினான். அப்பொழுது பரமர் மகிபனிடம் "மதிப்புக்குரிய தலைவரே, வெறுமே பளிங்குக் கல்லால் செதுக்கிய யானைக்காக நாட்டின் சிறந்த நிர்வாகி ஒருவருக்கு மரணதண்டனை கொடுப்பது அழகல்ல. எதையும் யோசித்துச் செய்யுங்கள். நான்

வேறொன்றும் சொல்வதற்கில்லை" என்று கூறிவிட்டுச் சென்றார்.

தண்டனை விதிப்பதற்கான நாளும் நெருங்கி வந்தது. மகிபனுக்குப் பரமரிடம் இருந்து துண்டுப் பிரசுரம் ஒன்று வந்தது. அதில் பின்வருமாறு எழுதப் பட்டிருந்தது.

"மதிப்புக்குரிய நாட்டுத் தலைவர் அவர்களுக்கும், நிர்வாகசபை அங்கத்தினர்களுக்கும், விலையுயர்ந்த பொருளாகத்தான் இருந்தாலும், பளிங்குக்கல் யானை உயிருள்ளதல்ல!. அதுவும் வேண்டுமென்றே அது உடைபடவும் இல்லை. தற்செயலாக நடந்தது. ஆனந்தபிள்ளை கவனப் பிசகால் நடக்கும் என்று சொல்வதற்கில்லை. நீங்கள் தட்டினாலே உடையும் தன்மை கொண்டது. அக்கல்லுக்காக ஆனந்தபிள்ளைக்கு மரணதண்டனை வழங்கினால் எனது தலைமையில் மக்கள் நூதனசாலையைத் தவிடு பொடியாக்க நேரிடும். இது உறுதி. உங்களால் எத்தனை மரணதண்டனை விதிக்க முடியுமோ விதித்துக் கொள்ளுங்கள்.

இப்படிக்குப்
பரமர்.

என்று எழுதியிருந்தது.

மகிபனுக்கு கடும் ஆவேசம் வந்தது. பற்களை நறநற என்று கடித்துக் கொண்டே "பரமனை

இங்கே இழுத்து வாருங்கள்" என்று கட்டளையிட்டான். அந்த வேளையில் நிர்வாகக்குழுவில் இருந்த உறுப்பினர் ஒருவர் எழுந்து "தலைவரே. நிதானத்தை இழந்து விடாதீர்கள். ஆனந்தபிள்ளையின் மரணதண்டனை விஷயமே நாட்டில் கலவரம் உண்டாகும் நிலையேற்படும் போது ஞானிபரமரின் மீது கைவைத்தால் என்னவாகும் யோசித்துப் பாருங்கள்" என்றார். மகிபனும் ஆத்திரத்தை விடுத்து யோசித்தான். ஆனந்தபிள்ளைக்கான மரணதண்டனையையும் நீக்கினான். பரமரிடம் தான் நடந்து கொண்ட முறைக்காக மக்கிப்புக் கோரினான்.

## யார் கூறியது?

ஆகாகான் அரண்மனையில் காந்தி சிறையில் இருந்தார். அந்த வேளையில் காந்தியின் நண்பரான மகாதேவ தேசாய் காலமாகி விட்ட செய்தி காந்தியைக் கவலைக்குள்ளாக்கி விட்டது. தன் பிறந்த நாளைக் கூட நினைவில்லாமல் மௌனமாவ இருந்தார் காந்தி.


காந்தியின் மௌனத்தைக் கலைக்க எண்ணினார் அவருடன் கூடவே இருந்த கவிக்குயில் சரோஜினி தேவி. "நான் கேட்கும் கேள்விக்கு உங்களால்



மறுமொழி சொல்ல முடியுமா?. பாபுஜி" என்று கேட்டார். காந்தியும் ஆமென்று தலையாட்டினார்.

காந்தியைப் பார்த்த கவிக்குயில் "பாபுஜி, ஏழைகளிடத்தில் இறைவன் உணவு வடிவத்தில் வருகிறான் என்னும் வரிகள் யாரால் கூறப்பட்டதென்று தெரியுமா?. தெரிந்தால் சொல்லுங்கள். என்றார். "கேள்விப்பட்ட வரிகளாகத் தான் இருக்கின்றன. யார் என்பது நினைவுக்கு வரவில்லை" என்று கூறிக் கொண்டு தீவிரமாக யோசித்தார் காந்தி.

கவிக்குயில் காந்தியடிகளைப் பார்த்துச் சிரித்தார். "பெரியவரே, இது கூடவா உங்களுக்குத் தெரியவில்லை. அந்த வரிகளைக் கூறியவர் நீங்கள் தான்" என்று கூறிச் சிரித்தார். காந்தியும் கூடவே சேர்ந்து சிரித்துக் கொண்டார்



# வினாவிடைப் போட்டி

1. நீச்சல் போட்டியை ஒரு விளையாட்டாக மாற்றிய நாடு எது?

ஜதிசுரம், பப்பாளி, பாலைவனம், பின்னல்.

2. கடந்த இருபது ஆண்டுகளாக வறுமையிலேயே வாடும் மக்களைக் கொண்ட நாடு எது?

மொட்டு, அஸ்ஸாம், கட்டிடம், பிரிவு, அக்கா.

3. உருளைக் கிழங்கை உலகறியச் செய்த நாடு எது?

ஸ்பரிசம், தளபாடம், தானியம், அப்பியாசம்.

4. "ஃஸ்பான்" என்பது இந்த நாட்டின் பழைய பெயர். நாடு எது?

பிள்ளை, அரிசி, சுத்தம், தாளம், இனிமை, மயானம்.

5. "நீல இல்லம்" எந்த நாட்டு ஜனாதிபதியின் இல்லம் இப்படி அழைக்கப் படுகின்றது?

தெய்வம், புன்னகை, நன்கொடை, பரிதாபம், நியாயவாதி.

# அழகு

அன்று சனிக்கிழமை. சனிபகவானின் வாகனமாகிய காகத்திற்குக் கொண்டாட்டம். வயிறு நிறைந்த உணவு உண்டாயிற்று. களைப்பாக இருந்தது. பறந்து வந்து வயற்காட்டில் உள்ள மரக்கிளையில் உட்கார்ந்து கொண்டது. "ஜீவ்" வென்ற சத்தம் கேட்கவே திரும்பிப் பார்த்தது. பக்கத்தில் தன் தோகையைச் சுருக்கிக் கொண்டே மயில் வந்து உட்கார்ந்தது.

தன் அழகையும் காகத்தையும் நினைத்துப் பார்த்த மயிலுக்குப் பெருமை பிடிபடவில்லை. காகத்தைப் பார்த்து "காக்கையாரே, என் அழகைப் பார்த்தீரா? எத்தனை வர்ணங்கள் என் உடம்பை அலங்கரிக்கின்றன.என் தலையால உள்ள கொண்டை எவ்வளவு அழகாக இரக்கின்றது. என் தோகையின் நீளத்தையும், அதில் காணும் வர்ணங்களையும் கவனித்தீரா? என் நீளமான கழுத்தின் கவர்ச்சியையும் அந்த நீல நிறத்தையும் பார்த்தீரா? நான் எவ்வளவு அழகாய் இருக்கிறேன்" என்று தன்னைப் பற்றிப் புகழ்ந்து கொண்டது.



காகம்
ஒன்றும் பேசாமல்
கேட்டுக்
கொண்டிருந்தது.
தன்னையும்
காகத்தையும்
நினைத்துச்
சிரித்துக்
கொண்டது மயில்.
பின்பும் சும்மா இருக்கவில்லை. அழகான
நான் உனக்குப் பக்கத்தில் இருக்கிறேன்.
என்னோடு இருக்கும் வேளையில் உன்
அழகு, அதாவது உன் கறுப்பு நிறம்
நன்றாக இருக்கிறது. ஒற்றை விழியும்,
அடங்காத முரட்டுச் சிறகும்....... என்று
கூறிச் சிரித்தது மயில்.

"ஆண்டவன் படைப்பில் எத்தனை விதம். உன்னைப் படைத்த ஆண்டவன் தான் என்னையும் படைத்திருக்கிறான். இன்னும் பூமியில் எத்தனை விசித்திரங்களைப் படைத்திருக்கிறான். எல்லாம் அவன் செயல்" என்று வேதாந்தமாகப் பேசியது காகம். மயில் காகத்தைப் பார்த்துச் "சமாளிக்கிறாய். உன்னோடு சரிசமமாக இருக்க எனக்கு வெட்கமாக இருக்கிறது. அடுத்த மரத்தில்

போய் இரு" என்றது. மறுப்புக் கூறாமல் காகமும் அடுத்த மரத்தில் போய் இருந்தது.

சிறிது நேரத்தின் அங்கு அமைதி நிலவியது. இறுமாப்புடன் கண்களை மூடிக் கொண்டு தன்னைப் பற்றிப் பெருமையோடு நினைத்துக் கொண்டிருந்தது மயில். அருகில் சத்தம் கேட்கவே திரும்பிப் பார்த்தது காகம். வேட்டையாட வந்த காட்டுவாசிகள் விரித்த வலையில் மயில் அகப்பட்டிருந்தது. காட்டுவாசிகளில் ஒருவன் மற்றவனைப் பார்த்து "அண்ணே! இந்த மயிலை மிருகக் காட்சிச்சாலைக்குக் கொடுத்து விடுவோம். எங்களுக்கு நிறையப் பணம் தருவார்கள். எங்கள் சகோதரிக்குக் கல்யாணம் செய்து கொடுத்து விடலாம்" என்று சொன்னான்.

இப்போது காகம் மயிலைப் பார்த்துச் சிரித்தது. மயிலைப் பார்த்து "மயிலாரே!, வாழ்வில் யாருமே கர்வம் கொள்ளக் கூடாது. உம்முடைய அழகைப் பற்றி எப்படி எல்லாம் பெருமை பேசினீர்!. அழகால் வந்த ஆபத்தைப் பார்த்தீரா!. இனி என்ன. உம்மைக் கொன்றிருந்தால் கூடப் பரவாயில்லை. கூட்டில் அடைத்து வேடிக்கை காட்டப் போகிறார்கள். எந்த வித சுதந்திரமும் இல்லாமல் வாழும் வரை

கூட்டிலேயே இருக்கப் போகிறீர். அழகு என்பது இரசிப்பதற்கு மட்டும்தான் என்பதை உணர்ந்து கொள்ளும்." என்றது.

<u>இதோ நொடிகள்</u>

1.கொத்துக் கொத்தாய் ஈச்சங்காய், கோடரி ஈச்சங்காய் மதுரைக்குப் போனாலும் வாடாத ஈச்சங்காய்

2. தண்ணீர் பட்டால் செத்துப் போகும்

3. நீதி தீர்ப்பதில் நிகரில்லாதவன்

4. சேர்ந்திருந்தால் கால் வீடு பிரிந்து விட்டால் குப்பை மேடு

5. தாடிக்காரன் முறைத்துப் பார்க்கிறான்.

விடைகள்:

1. பற்கள் 2. நெருப்பு 3. தராசு 4. செருப்பு
5. ஆட்டுக்கடா

அனுப்பியவர்:ஜெயபாலசந்த் மனோரஞ்சிதராஜா
MÜNSTER

# நீங்களும் அறிந்திருக்க...........



1.சந்திரனில் முதலில் காலடி எடுத்து வைத்தவர்
நீல் ஆர்ம்ஸ்ரோங்

2. விண்வெளிக்கு முதன்முதல் சென்றவர்
யூரி ககாரின்

3. முதன்முதல் விண்வெளிக்குச் சென்ற பெண்மணி
வாலண்டினா தெரஸ்கோவா

4. விண்வெளியில் முதன்முதலாகப் பறந்த மனிதன்
அலெக்ஸ் லியோ நோவ்

5.சந்திரனை நோக்கி விண்வெளிக்கலம் முதலில் விட்ட நாடு
ரஷ்யா

6.முதல் அமெரிக்க ஜனாதிபதி
ஜார்ச் வாஷிங்டன்

7.இங்கிலாந்தின் முதல்பிரதமமந்திரி
வால்போல்

8.சீனக்குடியரசின் முதல்தலைவர்
சன்யாட்சன்

9. சீன மக்கள் குடியரசின் முதல் தலைவர்
மா சே துங்

10. உலகின் முதல் பெண் பிரதமர்
திருமதி பண்டாரநாயக்கா

அனுப்பியவர்: முகுந்தன் மகேந்திரன்
Berg.Gladbach

## சார்லி சப்ளின்

மிகுதியான பணமும் புகழும் மனிதனை மாற்றி விடும் என்னும் இலக்கணத்தைச் சார்லி பொய்யாக்கி வாழ்ந்தார். தன்னோடு நடிக்கும் நடிகர்கள் எல்லோரிடமும் அன்போடும், பெருந்தன்மையோடும் பழகி வந்தார். அவரை விடப் குறைந்த தரத்தில் இருந்தபோதும் சில நடிகர்கள் அவரின் நீண்டகால நண்பர்களாக இருந்திருக்கின்றனர். டக்ளஸ் என்ற நடிகர் தன் இறுதிக் காலம் வரை சார்லியின் நண்பராகவே இருந்தார்.

அந்தக் காலத்தில் ஹலிவூட்டில் பெரும் மாளிகை கட்டியபெருமையை உடையவர் டக்ளஸ். ஒவ்வொரு வார இறுதியிலும் டக்ளஸ்சுடன் தன் பொழுதைச் சார்லி கழித்து வந்தார். இயற்கையை

இரசிப்பதில் இருவருமே விருப்பம் கொண்டவர்கள். அவர்களுடைய நட்பில் சிறிது கூட பிரிவு இருந்ததில்லை. மியூச்சுவல் நிறுவனத்தில் சார்லி பணியாற்றிய வேளையில், அவருடைய நெருங்கிய நண்பரான சக நடிகர் ஒருவர் அவரைச் சந்தித்தார்.

"சார்லி, என்றழைத்த குரல் கேட்டு நிமிர்ந்தார் சார்லி. நண்பரோடு ஒரு அழகிய வாலிபனும் வந்திருந்தான். நண்பர் பேச்சைத் தொடர்ந்தார்."சார்லி, இவர் பெயர் வலண்டினோ. திரைப்படத்தில் வாய்ப்புத் தேடி வந்திருக்கிறார். உங்களைச் சந்திக்க வீரும்பினார். அழைத்து வந்தேன்" என்றார். பெரிதும் கர்வமின்றி தம்மைத் தேடி வந்த அந்த இளம் வாலிபனிடம் சகசமாகப் பழகினார் சார்லி. "உங்களைச் சந்தித்தது என் வாழ்க்கையில் மறக்கவே முடியாது" என்று பெருமிதத்துடன்



கூறினான் வலண்டினோ.

அந்த வலண்டினோவை, சார்லி ஒரு வருடம் கழித்து விழாவொன்றில் சந்திக்க நேர்ந்தது. நேருக்குநேர் சந்தித்த போதும் சார்லியைக் காணாதவன் போலச் சென்றான் வலண்டினோ. அவ்வேளையில் வலண்டினோ நடிகனாகத் திரையில் புகழ் பெறத் தொடங்கியிருந்தான். அவனது போலித்தனத்தைக் கண்டு சார்லி புன்னகை செய்தார். பின் அவனைப் பின் தொடர்ந்தார். அருகில் சென்று "வலண்டினோ, என்ன என்னைச் சந்தித்து விட்டுச் சென்ற பிறகு ஒரேயடியாக உயர்ந்து விட்டாய்" என்றார். தன் கர்வத்தனத்துக்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டான் பெருமைக்குரிய நட்சத்திரமான வலண்டினோ என்ற அந்த இளைஞன்.

.

தன்னோடு சாதாரணமாகப் பழகியவர்களையே சார்லி மறக்கவில்லை என்றால், தன் உடன் பிறந்து, தனக்காக எவ்வளவோ உதவிகள் பெற்று, தன்னை பெருமைக்குரியவனாக்கிய சிட்னியை மறந்து விடுவாரா என்ன!!. சிறு வயதிலிருந்தே அண்ணன் தனக்காகச் செய்து வரும் தியாகங்களை உணர்ந்தவர் சார்லி. சிட்னியைத் தன் செயலாளராக வைத்துக் கொண்டார். தன் செல்வாக்கு உயர்ந்திருந்த வேளையில் கீஸ்டோன் ஸ்ருடியோவில்

தன்னை விடவும் கூடுதலான சம்பளத்தில் வேலை வாங்கிக் கொடுத்திருந்தார்.

பியூச்சுவல் சிறுவனத்தாரிடம் தான் பெற்ற முன்பணமாகிய நூற்றிஜம்பதினாயிரம் டொலரில் அரைவாசிப் பணத்தை, அண்ணனிடமே கையளித்தார் சார்லி. தான் புகழ் பெறவும், செல்வாக்குப் பெறவும், திரை மறைவில் தனக்கு உதவியவர் தன் அண்ணன் தான் என்பதைச் சார்லி மறந்து விடவில்லை.


-தொடரும்-

நம்முடைய விடாமுயற்சியில் தான் மனநிறைவு அடங்கியிருக்கிறதே தவிர அதன் முடிவில் அல்ல.
-எலியட்-

நன்றி மறத்தல் என்னும் குணத்தை மிருகங்கள் மனிதனுக்கு விற்று விட்டன.
-சார்ல்ஸ் கோல்டன்-

தியாகியின் இரத்தத்தை விடவும் அறிஞனின் மை தூய்மையானது.
-முகமது நபி-

# குகை



ஆதிகால மனிதன் மரங்களின் நிழல்களிலும், குகைகளிலும் வாழ்ந்ததாக அறிந்திருக்கிறோம். கோடை காலத்தில் மர நிழல்கள் அவனுக்கு ஆறுதலாக இருந்தபோதும் மழைக்காலத்தில் மரநிழல் அவனுக்கு ஆறுதலைக் கொடுக்கவில்லை. அது மட்டுமன்றி கொடிய மிருகங்களினால் வரும் துன்பங்களிலிருந்தும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டி ஏற்பட்டது. அந்த வேளையில் குகைகள் அவனுக்குப் பாதுகாப்புக் கொடுத்தன.

குகைகள் மனிதனுக்கு கோடை காலத்திலும் மழைக் காலத்திலும் பெரிதும் உதவியாக இருந்தன. காலப் போக்கில் குகைகளை வைத்துக் பல கதைகள் ஏற்பட்டன. ரோமர்கள் வனதேவதைகள் வாழும் இடங்கள் என்று நம்பினார்கள். கிரேக்கர்கள் தெய்வங்கள் இருக்கும்

ஆலயங்களை குகைகள் என்று நம்பினார்கள். உலகில் பல இடங்களிலும் சிறிய பெரிய குகைகள் இருக்கின்றன. குன்றுகள், பெரிய மலைகள் இவற்றின் அடியில் இக்குகைகள் அமைந்திருக்கும்.

இந்தியாவில் பல மலைக் கோயில்கள் இருக்கின்றன. சித்தன்னவாசல், மகாபலிபுரம், போன்ற இடங்களில் குகைச் சிற்பங்களை இருக்கின்றன. இந்தியாவின் அஜந்தாக் குகைச் சிற்பங்கள் உலகப் புகழ் கொண்டவை. நம் நாட்டிலும், சிகிரியாவில் உள்ள குகைச் சிற்பங்கள் பெருமைக்குரியவையே. இயற்கையாகவே அமையும் இந்தக் குகைகள் எப்படி ஏற்படுகின்றன என்று பார்ப்போம்.

பெரிய அலைகள் பெரிய கற்பாறைகள் மேலும், குன்றுகளின் மேலும் மோதுகின்றன. இந்தவேளைகளில் பாறைகள் அல்லது கன்றுகள் குடையப்பட்டுக் குகைகள் ஏற்படுகின்றன. திடீரென்று இவை ஏற்படுவதில்லை. இவை உருவாகப் பல ஆண்டுகள் எடுக்கும். கடற்கரைக் குகைகள் இவ்வாறே தோன்றின.

பூமியின் மேல் பரப்பில் உள்ள பாறைகள் எரிமலைகளால் இடம் மாறுகின்றன. நெருப்புக் குழம்புகள் வழியும் தேக்கங்கள் குகைகள் உருவாக வழி செய்கின்றன. சுண்ணாம்புப் பாறைகளின் மேற்பரப்புக்களை தண்ணீர் அரித்துச் செல்வதாலும், குகைகள் உண்டாகின்றன. இந்தவகையான குகைகள் வட அமெரிக்காவில் இருக்கின்றன. குகைகள் வரிசையாகவும், ஒன்றுக்கு மேல் ஒன்றாகவும், அடுக்கிய நிலையில் காணப்படுகின்றன.

# எறும்பினால் உயர்ந்த சிறுவன்



ஓர் ஊரில் ஒரு தாயும் அவளுடைய ஒரே மகனும் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் மிகவும் ஏழைகள். அந்தச் சிறுவன் தேனீர் குடிப்பதற்காகத் தாயார் தரும் சீனியில் மிச்சப் படுத்தி ஒரு கடதாசியில் சுற்றி வைத்தான். ஒரு நாள் தாய் மகனிடம் "இன்றைக்குக் கடைகள் பூட்டு. ஆனாலும் சில கடைகள் திறந்திருக்கும். சீனி வாங்கக் காசு இல்லையே" என்று சொல்லி வருந்தினாள். அப்போது மகன் "அம்மா, தேனீர்

வையுங்கள். நான் சீனி கொண்டு வருகிறேன்" என்றான். கடதாசியில் சீனி இல்லை. முழுவதும் எறும்பாக இருந்தது.

அவன் கடதாசியைக் கசக்கினான். எறும்புகள் செத்திருந்தன. எல்லா எறும்புகளையும் எண்ணினான். நூறு எறும்புகள் இருந்தன. அவன் தாயிடம் வந்து "அம்மா நான் நூறு உயிர்களைக் கொன்று விட்டேன்" என்றான். என்ன! நூறு உயிர்களைக் கொன்று விட்டாயா? யாரைக் கொன்றாய்?" என்று கேட்டாள். மகன் "அப்பொழுதும் "நூறு உயிரைக் கொன்று விட்டேன்" என்று மட்டும் சொன்னான். இந்தச் செய்தி ஊர் முழுவதும் பரவியது. ராஜாக்கள் கூட இதை அறிந்து ஆச்சரியப் பட்டனர்.

அந்த நாட்டு ராஜாவிடம் மூன்று கள்வர்கள் வந்து களவெடுத்துச் சென்றனர். ராஜா சிறுவனைச் சபைக்கு அழைத்தான். "அந்தக் கள்வர்களைப் பிடித்துக் கொடுக்க பதினைந்து நாட்கள் தருகிறேன். உனக்குத் தேவையான சாப்பாடு தருவோம். அக்கள்வர்களை உயிருடனோ, அல்லது பிணமாகவோ ஒப்படைக்க வேண்டும். இல்லாவிட்டால் உனக்கு மரண தண்டனை விதித்து விடுவேன்." என்றார்.

அவனுக்கு நல்ல உணவுகள் கொடுத்தார்கள் ஆனாலும் அவனுக்குப் பயத்தினால் உண்ண முடியவில்லை. சிறுவனாகிய அவன் எப்படிச் கள்வர்களை பிடிக்க முடியும்!, அவன் அவர்கள்

தரும் உணவை எல்லாம் ஒன்றாகக் கட்டி வைத்திருந்தான். பதினான்காம் நாள் இரவு வந்தது. அவன் இரகசியமாகத் தப்பி விட எண்ணினான். அரண்மனையை விட்டுப் புறப்பட்டான். வழியில் மூன்று கள்வர்களும் வந்தார்கள். அவன் பயத்தால் நடுங்கியவாறே நின்றான்.

"என்னடா, பொட்டலத்தில் வைத்திருக்கின்றாய்?" என்று கேட்டான். சிறுவன் பயந்து கொண்டே "சாப்பாடு" என்றான். பொட்டலத்தைப் பறித்த மூவரும் அதிலிருந்த உணவைச் சாப்பிட்டனர். அந்த இடத்திலேயே இறந்து விட்டனர். அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. நாள்சென்ற உணவு இயற்கையிலேயே பழுதடைந்து நஞ்சாகி விடும் என்பது அவனுக்குத் தெரியாது. நஞ்சை உண்டவர்கள் இறக்கத் தானே வேண்டும். சிறுவன் மகிழ்ச்சியோடு மூவரது உடல்களையும் கொண்டு சென்று அரண்மனை வாயிலில் போட்டான்.

பின் "அரசே, கள்வர்களின் உடல்களைக் கொண்டு வந்திருக்கின்றேன் என்று கூறினான். ராஜா வந்து பார்த்தார். அவருக்கு மிகுந்த சந்தோஷமாக இருந்தது. சிறுவனைப் பாராட்டிப் நிறையப் பணமும் கொடுத்து அனுப்பினார். இந்தச் செய்தி நாடெங்கும் பரவியது. சிறுவனை எல்லோரும் பாராட்டினர். சிறுவனும் தாயாரும் சந்தோஷமாக வாழ்ந்து வந்தனர். சிலகாலம் சென்றது. அவனைத் திரும்பவும் ராஜா அழைத்தார். அப்போது அவன் வளர்ந்து வாலிபனாகி இருந்தான்.

அரண்மனைக்கு வந்த அவனிடம் அரசர் "எங்கள் நாட்டைப் பிடிப்பதற்கு அயல் நாட்டு அரசன் திட்டம் போட்டிருக்கிறான். அவனிடம் இருந்து நாட்டை நீ தான் காப்பாற்ற வேண்டும். காப்பாற்றிக் கொடுத்தால் என்மகளையே உனக்குத் திருமணம் செய்து வைக்கிறேன்." என்றார். சிறுவன் பொறுமையானவனாகி இருந்தானே தவிர எதையும் செய்யக் கூடியவன் இல்லை. அயல் வாட்டு எல்லைக்குச் சென்றான். இந்த முறை மரணம் தான் என எண்ணிக்கொண்டிருந்தான்.

எதிரே போர்வீரர்கள் அம்பும் வில்லுமாக வந்து கொண்டிருந்தார்கள். அவன் அருகில் இருந்த பானையைத் தூக்கித் தன்னைத் தெரியாமல் முகத்தை மறைத்துக் கொண்டான். "அவன் பானையில் ஏதோ மந்திரம் செய்திருக்க வேண்டும். அந்த வித்தை எங்களுக்குத் தெரியாதே. எல்லோரும் ஓடி விடுவோம்" என்று கூறிக் கொண்டு எல்லோரும் ஓடி விட்டனர். யாரும் தன்னை நெருங்காததைக் கண்ட சிறுவன் திகைத்து "இதென்ன மாயம்" என்றெண்ணிச் சிரித்தான். ராஜாவும் மிகவும் சந்தோஷப்பட்டார். தன் மகளைச் சிறுவனுக்குத் திருமணம் செய்து கொடுத்தார். அந்த நாட்டுக்கே அவனை ராஜாவாக்கினார்.

அனுப்பியவர்: சுகந்தி வரதராஜா
Hahnenklee



வீட்டுக்கு விருந்தினர்கள் வர இருந்தனர். முல்லாவை மனைவி சாமான்கள் வாங்கி வரும்படி அனுப்பினார். தெருவின் சந்திப்பில் நின்று கடை வீதிப் பக்கம் முல்லா திரும்பினார். எதிரே அவருடைய இந்து நண்பர் வந்து கொண்டிருந்தார். அவர் நொண்டி நொண்டி நடந்து வருவதைக் கண்ட முல்லா நண்பரின் அருகில் சென்றார்.

"காலில் என்ன? நேற்றுக் காணும்போது கூட நன்றாக இருந்தீர்களே!". என்று கேட்டார். அதை ஏன் கேட்கிறீர்கள்? முல்லா, காணி ஒன்று வாங்க வேண்டி

யிருக்கிறது. அதற்காக உங்களிடம் யோசனை கேட்கலாம் என்று உங்கள் வீட்டுப் பக்கமாகத் தான் வந்து கொண்டிருந்தேன். வழியில் கல்லொன்று அடித்து விட்டது." என்றார் நண்பர்.

"ஆ! இதென்ன, அநியாயம்! ஒரு நல்ல மனிதனைக் கல் அடித்து விட்டதா? எந்தக் கல் அடித்தது என்று பார்ப்போம்." என்று கேட்டுக் கொண்டே நண்பரை அவர் வந்த பக்கமே அழைத்துச் சென்றார் முல்லா. வழியில் பாதையில் கிடந்த கல்லைக் காட்டிய நண்பர், இந்தக் கல் தான் அடித்து விட்டது" என்றார். நண்பர்.


முல்லா, ஆத்திரம் கொண்டவர் போல, கல்லை நோக்கிக் குனிந்தார். "ஏ,கல்லே என் நண்பர் உனக்கு என்ன செய்தார்!. ஏன் அவருடைய காலில் இடித்தாய்?" என்றார். அப்போது நண்பர் முல்லாவைப் பார்த்து "முல்லா, உமக்கென்ன பைத்தியமா? கல் என்ன உயிருள்ளதா உம்மோடு பேசுவதற்கு?" என்றார்.

"நண்பரே, இப்போது சொல்லும். உயிரில்லாத இந்தக் கல் உம்மைத் தேடி வந்து இடித்ததா?. நீங்கள் தானே, கவனமில்லாமல் கல்லில் இடித்துக் காயத்தை உண்டாக்கிக் கொண்டீர்கள்." என்று சொல்லிச் சிரித்தார். நண்பரும் கூடவே தலை குனிந்தவாறே சிரித்துக் கொண்டார்.

# அரசனின் செல்வம்

தாமரைபுரத்து நகர மக்கள் என்றுமே வேதனையுடனே காலம் கழித்து வந்தனர். கொடுமைக்கார அரசனின் கீழ் வாழும் மக்கள் எப்படி மகிழ்ச்சியுடன் வாழ முடியும்?. மக்களை மிகவும் கஷ்டப்படுத்தி வேலை வாங்கினான். கடும் வரிகளை நாட்டு மக்களுக்கு விதித்தான். மக்கள் செல்வங்களை எல்லாம் கொள்ளை அடித்தான்.

தன் நாட்டில் மட்டுமல்ல. அயல் நாட்டின் மீதும் படையெடுத்துச் சென்று அந்நாட்டின் செல்வங்களையும் கொள்ளை அடித்தான். மிகவும் பெறுமதி கொண்ட நாணயங்களை, நகைகளை அவன் வைத்திருந்ததால் அவற்றை எங்கே மறைத்து வைப்பது என்று யோசித்தான்.




ஆழமான குளமொன்றை வெட்டுவித்தான். அதன் அடியில் நிலவறை ஒன்றை கட்டுவித்தான்.

அதற்குள் தன் செல்வங்களை எல்லாம் ஒளித்து வைத்தான். நிலவறை கட்டியவர்களுக்கு மட்டும்தான் அரசனின் இரகசியம் தெரிந்திருந்தது. அரசனைப் பழி வாங்கவும், செல்வங்களை மீட்கவும் அயல் நாட்டு அரசன் தருணம் பார்த்திருந்தான். குளத்துக்கு அடியில் ஒளித்து வைத்திருக்கிறான் என்பதையும் எப்படியோ அறிந்து கொண்டான். குளத்துக்குக் கீழே நிலவறையைக் கட்டியவர்கள் தான் அயல்நாட்டவருக்குச் சொல்லி இருப்பார்கள் என்று எண்ணிய அரசன் நிலவறை கட்டியவர்கள் எல்லோரையும் கொலை செய்தான்.

ஆனாலும் அயல் நாட்டின் மன்னனால் தோற்கடிக்கப் பட்டான். கொலை செய்யப்பட்டான். குளத்துள் பலவிதமான தேடுதல் நடவடிக்கை மேற்கொண்ட போதும் எதுவுமே அகப்படவில்லை. அவர்களுக்கு மட்டுமல்ல எவருக்குமே அகப்படவில்லை. இப்பொழுதும் தேடிக் கொண்டே இருக்கிறார்கள். இன்னும் கிடைக்கவேயில்லை.

# திருவிழா



திருவிழாவாம் திருவிழா
தேர் இழுக்கும் திருவிழா

திருவிழாப் பார்க்கலாம்
தேர் கூட இழுக்கலாம்

சாமியைப் பார்க்கலாம்
வேண்டியதைக் கேட்கலாம்

பலூன் பொம்மை வாங்கலாம்
பட்டுச் சொக்காய் வாங்கலாம்.

அம்மா அப்பா வாருங்கள்
திருவிழாவுக்குப் போகலாம்

அனுப்பியவர்
வித்தியா சிவசுப்பிரமணியம்
**Selm**

# ஔவையார்



ஒருநாள் ஔவையார் பாதை வழியே நடந்து வந்து கொண்டிருந்தார். எதிரே சில புலவர்கள் வந்து கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒரு புலவன் தரையில் குனிந்து மண்ணைக் கிள்ளி இடது கையில் மறைத்து வைத்துக் கொண்டான். ஔவையார் நெருங்கி வந்ததும் அவரைப் பார்த்து "ஔவையே! எனக்கும் உங்களுக்கும் ஒரு பந்தயம். எனது இடக்கையில்

என்ன இருக்கிறது சொல்லுங்கள். சரியாகச் சொன்னால் உங்களுக்கு நான் ஒரு பொன் தருகிறேன். இல்லாவிட்டால் நீங்கள் எனக்கு ஒரு பொன் தர வேண்டும்" என்றான்.

கூழுக்குப் பாடும் என்னிடம் பொன் ஏது? என்றாலும் சொல்லுகிறேன் என்று கூறிய ஔவையார் பாட்டிலேயே தன் பதிலைக் கூறினார்.

கற்றது கை மண்ணளவு கல்லாதது உலகளவு-
என்று
உற்ற கலைமடந்தை ஓதுகிறாள்- மெத்த
வெறும் பந்தயம் கூற வேண்டா-புலவீர்
எறும்பும் தன்கையால் எண்சாண்.

ஔவையின் பாடலைக் கேட்ட புலவன் "நீங்கள் கலைமடந்தை தான். எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டான். "நான் மதுரைக்குச் சென்று கொண்டிருக்கிறேன்" என்று கூறி விடை பெற்றார்.

பாண்டியனுடைய சபையில் பாண்டியன் நான்கு பலகை ஊஞ்சல்களில் பொன்னைக் கொட்டி தரமான பாடல்கள் நான்கைப் பாடுபவர்களுக்குப் பலகையில் உள்ள பொன் சொந்தம் எனப் பந்தயம் வைத்திருந்தான். யாருமே வெற்றி பெறாத நிலையில் ஔவையார் பாடல்களைப் பாடி வெற்றி பெற்றார். பாண்டியன் ஔவையாரிடம் பொன்னைப் பெற்றுக் கொள்ளும்படி வேண்டினான். "கூழுக்காகப் பாடுபவள் நான். எனக்குப் பொற்குவியல் எதற்கு?. ஏழைப் புலவர்களிடம்

கொடுத்து விடுங்கள்" என்று அரசனிடம் கேட்டுக் கொண்டார்.

பாண்டியன் ஔவையைச் சங்கப் பலகையில் இருத்தி, கௌரவப்படுத்தினான். அங்கு புலவர்கள் தங்கள் ஐயங்களை கேட்டுத் தெளிந்தனர். பாண்டியனும் அவைப் புலவர்களும், ஔவையாரைப் புகழ்ந்து பாராட்டினர். பின் அவர்களிடம் விடை பெற்றுக் கொண்ட ஔவையார் தமது ஊரான உறையூருக்கு வந்தார். அங்கு "மோட்சம்" என்னும் பொருளைக் கொண்டு குறள்கள் பாடி முடித்தார். குறள் பாடி முடித்தாலும் ஔவையின் தமிழ்ப் பற்றுக் குறையவில்லை.

குழந்தைகளுக்காக அறம், பொருள், இன்பம், வீடு இவற்றை உள்ளடக்கி இலகுவான தன்மையில் "ஆத்திசூடி" பாடினார். அதை அடுத்துக் "கொன்றை வேந்தன்" "நல்வழி" "மூதுரை"போன்ற நூல்களைப் பாடினார். பின் அங்கிருந்த ஆற்றங்கரைக்குச் சென்று, அங்கிருந்த பிள்ளையார் கோவிலில் அமர்ந்து 'விநாயகர் அகவல்' பாடினார். கைலாயத்திற்கு சென்று இறைவனை வணங்க எண்ணினார். கைலாயத்திற்குப் புறப்படுவதற்காக கணபதியைத் தொழுது வணங்கினார். அங்கேயே அமரத்துவம் அடைந்தார்.

தஞ்சாவூரில் வளவன் ஆற்றங்கரையில் துளசியார் பட்டினம் என்னும் ஊரில் ஔவையாருக்குக் கோயில் இருக்கிறது.

-முற்றும்-




**NEKTAR FÜR KINDER**